★ விலை ரூபா 1-00

ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆடி 22 ஷவ்வா 27 இதழ் 175

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 7—8—83

# “இலங்கை உள்விவகாரத்தில் இந்தியா தலையிடாது!”

## ஜே. ஆரிடம் இந்திரா உறுதி

### இனஒற்றுமை அவசியமென்றும் வலியுறுத்து!

புதுடில்லி, ஆக. 6

‘‘இலங்கையில் இனங்களுக் கிடையே ஒற்றுமை நிலவ வேண்டுமென்பதையே இந் தியா விரும்புகின்றது. இலங் கையின் உள்விவகாரத்தில் இந்தியா ஒருபோதும் தலையிட மாட்டாது’’. என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இலங்கை நிலைபரம் குறித்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறி ஞர்.

பிரதமர் காந்தி மேலும் தெரிவித்ததாவது: ‘‘இலங்கை யின் உள்நாட்டு விவகாரத் தில் இந்தியா ஒருபோதும் தலையிடமாட்டாது. அவ்வாறு தலையிடுவது இந்தியாவுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத் தும். இலங்கையும் இந்தியா வும் நேரடித்தொடர்புகளைக் கொண்டுள்ளன. ஆகையினு லேயே இலங்கை விவகாரத்தில் இந்தியா அதிகஅக்கறை காட்டு கின்றது. இந்தியா இலங்கை யின் சம்பந்தமில்லாத உள் நாட்டு விவகாரத்தில் ஒரு

(4-ம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சி மாநாடு முடிந்துவிடவில்லை

# கூட்டணி எம். பி. க்கள் பேச்சுக்கள் நடத்தலாம்”

## செய்தித் தணிக்கை அமுல்

கடந்த மாதம் 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ‘ஈழநாடு’ பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

## பத்திரிகையாளர் மகாநாட்டில் அமைச்சர் லலித்’ தகவல்

(கொழும்பு)

‘சர்வகட்சி மாநாடு, முடிந்து விடவில்லை. பேச்சுவார்த்தைக்கு இன்னும் கதவுகள் திறந்திருக்கின்றன. பாராளுமன்றத்திற்குக் கூட்டணி எம். பி.க்கள் வராவிட்டாலும், சர்வ கட்சி மாநாட்டிற்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தலாம்.’

வர்த்தக கப்பல் துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, நேற்றுமுன் தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் லலித் அத்துலத் முதலி அங்கு மேலும் கூறிய தாவது:

‘தமிழர் விடுதலை கூட்டணி எம், பிக்கள், பாராளுமன் றத்திற்கு வராவிட்டாலும், தொடர்ந்து 3 மாத காலத் திற்கு எம். பியாக இருப்பார் கள். அதன்பின் அவர்கள் பாராளுமன் றம் வந்து ‘தனிநாடு’ ஒன்றை உருவாக்க ஆதரவளிக்கமாட் டோம்,’ என சத்தியப்பிரமா ணம் எடுத்துக் கொண்டால் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராக இருக்கலாம்.

‘கூட்டணி எம். பிக்கள் வட பகுதித் தமிழ் மக்களின் பிர திநிதிகளாகப் பாராளுமன்றத் தில் இருந்த சமயத்தில்கூட வடக்கில் பயங்கரவாத சம்ப வங்கள் இடம் பெற்றன, மக் கள் அச்சத்தினல் தகவல் கொடுக்க முன்வரவில்லை.

‘இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் எல்லோரையும் கூட் டணி பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை, வடபகு தமிழ்மக்களை மட்டும் கூட்ட ணியினர் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். கிழக்கில் 7 பாராளுமன்ற உறுப்பினர் கள் இருக்கின்றனர். இவற்றில் இருவர் மட்டுமே கூட்டணியி னர் மற்றும் எம். பி. க்கள் யாவரும் ஐக்கிய தேசியக்கட்சி யினரே. வடபகுதிக்கு வெளி யில் உள்ள தமிழரை ஐக்கிய தேசிய கட்சியினரும், திரு. எஸ். தொண்டமான் தலைமை யிலான இலங்கை தொழிலா ளர் காங்கிரஸுமே பாராளு மன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன. ஆதலால்

(2-ம் பக்கம் பார்க்க)

## அகதிகள் நிவாரணம் ஒத்துழைக்குமாறு ‘லயன்ஸ்’ ஆளுநர் வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் விசேட மாக வட்டுக்கோட்டை, பருத் தித்துறை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளின் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் அனைவரும், அகதிகள் நிவாரணவேலைகளில் ஈடுபட்டு ஒத்துழைக்குமாறு லயன்ஸ் கழக பிரதி மாவட்ட ஆளுனர் லயன் க. குணரத்தி னம் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, மா, சீனி, ஆகியவற்றை வட்டுக் கோட்டை, யாழ்ப்பாணம், பருத்தித்துறைப்பகுதி வர்த்த கர்களும், பொதுமக்களும், வழங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். [க]

## சேதங்களை மதிப்பிட அழிவு நிர்ணயக் குழு!

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட கலவரங் களின்போது ஆடை தயாரிக் கும், ஏற்றுமதிசெய்யும் தொழிலகங்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பிட விசேட குழுவொன்றை மத்திய வங்கி அமைத்துள்ளது.

‘அழிவுநிர்ணயக்குழு, என்ற இக்குழுவில் இலங்கை மத் திய வங்கி, கைத்தொழில் விஞ் ஞானஅமைச்சு, நிதிதிட்ட மிடல் அமைச்சு, வர்த்தக அமைச்சு ஆகியவற்றிலுள்ள வர்களும் பிரதிநிதிகளாக இடம்பெறுகின்றனர்.

பாதிக்கப்பட்ட ஆடை தயா ரிக்கும், ஏற்றுமதி செய்யும் தொழிலகங்களின் உரிமையா ளர்கள், நிர்வாகிகள்ஆகியோர் இக்குழுவுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள் ளனர்.

சுமார் பதினைந்துமேற்குறிப் பிட்ட தொழில் நிலையங்கள் வன்முறைகளின்போது பாதிப் படைந்தன. இதனுல் இவற் றில் கடமைபுரிந்த சுமார் 13,500 பேர் வேலையிழந்துள் ளனர் என்று தெரிவிக்கப்பட் டது. (கி)

## மூன்று கப்பல்கள் இன்று வந்துசேரும்!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மூன்று கப் பல்கள் அகதிகளைக்கொண்டு வந்துசேர்க்கும்.

‘லங்கா கல்யாணி’ இன்று நண்பகல் ஒருமணிக்கு 1600 அகதிகளுடன் வந்துசேரும். ‘மகாநுவர’ இன்று மாலை 5 மணிக்கு 400பேருடன் வந்து சேரும். ‘மேக்ஸ் செரண்டிப்’ என்ற கப்பல் இன்று இரவு 10மணிக்கு 600பேருடன் வந்து சேரும்.

தினமும் கப்பல்களில் அகதி களை அனுப்ப ஏற்பாடுசெய் யப்பட்டுள்ளது. ரயிலிலும் அகதிகளை அனுப்ப ஆலோசிக் கப்பட்டுள்ளது. (மா)

## ஐரிஷ் கெரில்லாக்களுக்கு 4,022 வருட சிறை

லண்டன், ஆக. 6

பிரிட்டனில் பிரிவினை கோரும் அயர்லாந்து கொரில்லாக்கள்மீதான வழக்குகள் நேற்றுடன் முடிவடைந்தன.

ஆண், பெண்கள் உட்பட மொத்தம் முப் பத்தைந்து ஐரிஷ் கெரில்லாக்கள் குற்ற வாளிகளாகக் காணப் பட்டனர். இவர்களுக்கு நாலாயிரத்து இருபத்தி ரெண்டு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட் டுள்ளது.

கெவின்மல்ருவ்என்ற ஐரிஷ் கெரில்லா தீவிர வாதி ஒருவருக்குஆயுள் காலச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (கி)

## பிரிட்டன் உதவி

[கொழும்பு]

இலங்கையில் வன்செயலால் பாதிக்கப்பட்ட அகதிகளுக் குப் பிரிட்டன் 50,000 பவுண் ஸ்ரேலிங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் வழங்கவிருக்கி றது. [க]

## அகதிமுகாமில் பிரசவம்

(கொழும்பு)

பம்பலப்பிட்டி இந் துக் கல்லூரியில் இரு தாய்மார்கள் அழகான இரு பெண் குழந்தை களைப் பெற்றெடுத்துள் ளனர்.

முகாமில் தங்கியுள்ள டாக்டர்களும், செஞ் சிலுவைச் சங்கத்தின ரும் பிரசவத்துக்கு உதவிபுரிந்தனர்.

பிரசவ வேதனையுற்ற இன்னெரு தாய் ஆஸ் பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். முகாமிலுள்ள மேலும் சுமார் 10 தாய்மார்கள் அடுத்த வாரம்அளவில் குழந்தை பிரசவிக்க லாம் என்று கூறப்படு கின்றது. (இ)

# ரூ. 10 லட்சம் பெறுமதியான கொள்ளைப் பொருட்கள் மீட்பு

## 20 சந்தேக நபர்களும் கைது

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டிருந்த வன்முறைகளின் போது கொள்ளையடிக்கப்பட்ட பொ ருட்களில் சுமார் பத்துலட்சம் பெறுமதியான பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன. இக் கொள்ளை சம்பந்தமாக 20 பேர்வரை கைது செய்யப்பட்டனர்.

பொலிஸார் கொள்ளையிடப் பட்ட பொருட்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட் டுள்ளனர். மீட்கப்பட்ட பொ ருட்களில் அநேகமானவை வானெலிப் பெட்டிகள், தொ லைக்காட்சிப் பொட்டிகள்,

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## தேவை

க. பொ. த. (உ. த) I. A. B. (Final) வயது 29. 5 வருட அனுபவம் (Book Keeper) ஆண். தகமைக்கேற்ற தொழிலை எதிர்பார்க்கிறார். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8100, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 8100

## விற்பனைக்கு

கொடிகாமம் சந்தியிலிருந்து 400 யாரளவில் றோட் அருகில் 100 பரப்பு காணி தென்னை, பனையுடன் உடன் விற்பனைக்குண்டு. துண்டுகளாகவும் வாங்கலாம். வீ. எம். சோமசுந்தரம், மீசாலை தெற்கு மீசாலை. 8119

## EDUCATION

I C M A- Explanatory Answers to questions of May 1983 Examination. Section A Rs. 30/- Section B Rs. 30/- Prof I Rs 45/-Vanniasingham, Vairavar Kadadcham, Palaly Road, Thirunelvely, Jaffna. 8113

## விற்பனைக்கு

அல்சேஷன் Pure bred 4 கிழமை நாய்க்குட்டிகள் (ஆண் பெண்) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி A. F. வின்சென்ற், 16, கோவில் வீதி, லேன், யாழ்ப்பாணம். 8128

கோப்பாய் இராச வீதியில் திறந்த மறியல்சாலையடியில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. மின்சார வசதி உண்டு. தோட்டம் செய்யலாம், வீடும் கட்டலாம். பிரித்தும் கொடுக்கப்படும். க. சந்திரசேகரம், பிள்ளையார் கோவிலடி, கோப்பாய். 8124

கோழிப்பண்ணையாளர்களின் கவனத்திற்கு தரமான கோழித்தீன் வகைகளையும், மருந்துவகைகளையும் 185, ஆஸ்பத்திரி வீதியில் (பழைய யாழ். ப. நோ. கூ. ச. கட்டிடத்திற்கு முன்) உள்ள கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையத்தில் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். சி. தியாகராசா, தலைவர். 8048

# அந்தியேட்டி அழைப்பு



தோற்றம்
05-05-1916

மறைவு
09-07-1983

## திருமதி வேதநாயகி இராசரெத்தினம்

(இராஜநாயகிப் படமாளிகை ஸ்தாபகரும், ஓய்வு பெற்ற ஓவசியருமான திரு. மா. இராசரெத்தினம் அவர்களது மனைவி.)

எமது அன்புத் தாயாரின் அந்தியேட்டிக் கிரியை 8-8-83 திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஊறணியிலும், வீட்டுக் கிரியைகள் பகல் 11 மணிக்கு வீட்டிலும் நடைபெறும். உற்றூர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், உதவிகள் புரிந்தோருக்கும் எமது குடும்பத்தின் நன்றிகள்.

ஆலடி ஒழுங்கை,
வல்வெட்டித்துறை

கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்,
8125

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரி 'எக்ஸ்றே' இயந்திரம் இயங்கத் தொடங்கவில்லை

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு சுகாதார திணைக்களத்தினால் கடந்த மாதம் அனுப்பிவைக்கப்பட்ட 'எக்ஸ்றே' படம் பிடிக்கும் இயந்திரம் இன்னும் இயங்கத் தொடங்கவில்லை. இதைப் பொருத்தி இயக்குவதற்கு கொழும்பிலிருந்து தொழில்நுட்ப ஊழியர்கள் வரவேண்டியிருப்பதாகதெரிவிக்கப்படுகின்றது.

தற்போது அவசியமாக 'எக்ஸ்றே' எடுக்கப்படவேண்டிய நிலையிலுள்ள நோயாளர்கள் மயிலிட்டியிலுள்ள காங்கேசன்துறை மார்பு நோய் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுஅங்கு 'எக்ஸ்றே' படம் பிடித்து வரப்படுவதாகவும், இதனால் நோயாளர்கள் பெரும்சிரமம் அடைவதாகவும் இதுபற்றி தெரிவிக்கப்படுகின்றது. (க)

# சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 2583 | 2. 1313 | 3. 5433 | 4. 2106 |
| 5. 2231 | 6. 818 | 7. 5492 | 8. 930 |
| 9. 5741 | 10. 5753 | 11. 174 | 12. 3516 |
| | 13. 4821 | 14. 13 | |

## தொண்டர் சபை,

அளவெட்டி குருக்கள் கிணற்றடி விநாயகர்ஆலயம்
8130

# கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB 543/184

(1) அம்பிகை கணபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் கருவியாத்தனை காரைதீவு கிழக்கு காரைநகர் -வழக்காளி

எதிராக

(1) ஆறுமுகம் தம்புவும் (2) பெண் பொன்னம்மாவும் (இறந்துவிட்டார்கள்) கருவியாத்தனை காரைதீவு கிழக்கு காரைநகர் தம்பு குமாரசாமி காரைநகர் தற்போது கனகராயன்குளம் 1ம், 2ம் எதிரிகளின் ஆதனங்களின் சட்டப்பிரதிநிதி. -எதிராளி

ஊர்காவத்துறை கோட்டின் MB 543 / 184ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1983 ஆம் ஆண்டு ஆவணி மீ 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

## தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 5600/-ம் 10-8-77 தொடக்கம் 17-9-82 வரைக்கும் ரூபா 4000/-க்கு 3% வீத வட்டியும் பின் முழுத் தொகையும் இறுக்கும் வரை 12% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 2169/.

## ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஷ்றிக் தீவுப்பகுதி கரைதீவு கோவிற்பற்று காரைதீவு கிழக்கு இறை ''கருவியாத்தனை'' பர. நில. இலா. 4½ நாலரையும் பனைகள் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு ஆறுமுகம் தம்புவுக்கும் பெண் பொன்னம்மாவுக்கும் உரிய ஆதனம் வடக்கு கந்தர் மகள் பொன்னம்மாவின் ஆதனம் மேற்கு சண்முகம் பெண் இலட்சுமியின் ஆதனம், தெற்கு ஆறுமுகம் வேலுப்பிள்ளையின் ஆதனம். இதடங்கலும் கிழக்கெல்லை ஆதனத்தின் தெற்கோரமாக 4 முழ அகல ஒழுங்கை நிலத்தால் போக்குவரத்து செய்யும் பாதையுருத்தும்.

சி. சோ. நரசிங்கம் J. P., L. I. V.,
நீதிமன்ற விற்பனையாளரும் விலைமதிப்பாளரும்.

தொல்புரம்,
சுழிபுரம்,
1-6-83.
8126

## வண்ணை வீரமாகாளி அம்மன் ஆடிப்பூர விழா

[யாழ்ப்பாணம்]

வண்ணை அருள்மிகு வீரமாகாளி அம்மன் ஆடிப்பூர விழாவையொட்டி நாளை திங்கட்கிழமை காலை தேர்த்திருவிழா நடைபெறும். செவ்வாய்க்கிழமை காலை ஆடிப்பூர தீர்த்தோற்சவம் இடம் பெறும்.

# அகதிகளுக்கு உணவு, மருந்து வகைகள்

[கொழும்பு]

இந்தியாவிலிருந்து அகதிகளுக்கு உணவு, மருந்து வகைகள் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் உணவு, மருந்துகள் தேவைப்பட்டால், அனுப்பி வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [க]

## கூட்டணி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கை மட்டுமே கூட்டணியினர் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். தமிழ் மக்கள் வடபகுதிக்கு வெளியில் கூடுதலாக இருக்கின்றனர். அவர்களை கூட்டணி பிரதிநிதித்துவப் படுத்தவில்லை.

''இந்தியாவுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு இலங்கையை ஒருதளமாக உபயோகிக்க எந்த ஒரு நாட்டுக்கும் இலங்கை அனுமதியளிக்காது.

அமைச்சர் அத்துலத்முதலி மேலும் கூறியதாவது; யுனைட்டெட் பிறெஸ் இன்டர் நஷனல் இலங்கை இந்தியாவுக்கெதிராகப் பயன்படுத்த அந்நியநாடுகளிடமிருந்து இராணுவ உதவிகளைக் கோரியது என்று தெரிவித்துள்ளது. இச்செய்தி முழுக்க முழுக்க பொய்யானதாகும்.

''இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே கசப்புணர்வுகள் தோன்ற இலங்கை அரசாங்கமோ அல்லது இலங்கை ஜனநாயகசக்திகளோ ஒரு போதும் இடமளிக்கமாட்டா.

இத்துடன் எந்த ஒரு நாட்டிடமிருந்தும் இலங்கை இந்தியாவுக்கெதிராகப்பயன்படுத்த இராணுவ உதவிகளையும் கேட்கவில்லை. எக்காரணம் கொண்டும் இலங்கையை இந்தியாவுக்கெதிரான இராணுவ தளமாகப் பயன்படுத்த எந்த ஒரு நாட்டுக்கும் இலங்கை அனுமதியளிக்காது.''

''அமைச்சர்களின் சில அதிகாரங்களை மாவட்ட சபைகளுக்கு வழங்க 81 - ம் ஆண்டு திட்டமிடப்பட்டிருந்தது. 1982-ல் தேர்தல்களில் அரசு கவனம் செலுத்தியதால் இத்திட்டத்தை அமுல் நடத்த முடியாமல் போய் விட்டது.

''1978 - ம் ஆண்டு அரசியலமைப்பில் தமிழ் தேசிய மொழியாக்கப்பட்டது. அரசியலமைப்பு விவாதத்தில் கூட்டணி எம். பிக்கள் கலந்து கொள்ளாதிருந்த போதும், திரு. ஏ. அமிர்தலிங்கம் தமிழ் தேசிய மொழியாக்கப்பட்டதைப் பாராட்டினார். மொழி விஷயத்தில் எவ்வித பாரபட்சமும் காட்டப்படவில்லை.

''தமிழ் மக்கள் பிரிவினையை ஆதரிக்கவில்லை என பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். சங்கங்கள் அமைத்து அதன் மூலம் பிரிவினையை ஆதரிக்கவில்லை என தீர்மானங்கள் நிறைவேற்றி அரசுக்குஅனுப்ப வேண்டும்.

முஸ்லிம்களும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் அரசுக்கு ஆதரவுதெரிவிப்பது போல, தமிழர்களும் ஆதரவு தெரிவிக்கலாம்.

தேசியக் கட்சிகளில் இலங்கைத் தமிழர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து தங்கள் உரிமைகளைக் கோரிக்கைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

வன்செயல் சம்பவங்களில் ஆயுதப்படையினர் ஈடுபட்டனரா? என நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்கு திருமலையில் மட்டும் கடற்படையினர் ஈடுபட்டதாக அமைச்சர் தெரிவித்தார். (இ)


## யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

# குறெஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.

## 05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலண்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலண்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA)
போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்
மற்றும் பிரயாண ஒழுங்குகள் எதுவானாலும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்...

# CROSS TRAVEL SERVICES (PVT)LTD.

Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor
BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

## நிவாரணப் பணிகளுக்கு சர்வதேச

# நாடுகள் நிறுவனங்கள் உதவி!

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற வன்முறைகளால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு பல உலக நாடுகளும், சர்வதேச பொது ஸ்தாபனங்களும் அன்பளிப்புகளும் நிதியுதவிகளும் வழங்கியுள்ளன.

ஆஸ்திரேலிய அரசாங்கம் இருபது லட்சம் ரூபாவை நிவாரணப் பணிகளுக்கென இலங்கை அரசுக்கு வழங்கியுள்ளது. இத்தகவலை இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் இலங்கை அரசுக்குத் தெரிவித்தார்.

பிரிட்டன் 50 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண்களை இலங்கை அரசின் நிவாரணப் பணிகளுக்காக வழங்கியுள்ளது. பிரிட்டனின் கடல் கடந்த நாடுகளுக்கான உதவிகள் அமைச்சர் திரு. திமொத்கி ரெய்சன் பிரிட்டன் பாராளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார். இந்தப்பண உதவிசர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாக வழங்கப்படுமென்றும் அவர் கூறினர்.

கெயர் ஸ்தாபனம், யுனிசெப் ஸ்தாபனம், பிரிட்டிஷ் சிறுவர் நிதியம், அமெரிக்க சிறுவர் நிதியம், செஞ்சிலுவைச் சங்கம், நோர்வேயின் ரெட்பாறு ஸ்தாபனம் ஆகியன இலங்கைக்கு நிவாரணம் வழங்க முன்வந்திருக்கும் ஏனைய பொது ஸ்தாபனங்களாகும்.

அமெரிக்கா சுமார் 30 ஆயிரம் தொன் கோதுமை மாவை சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கு அன்பளிப்பாக அனுப்பிவைத்திருந்தது. இந்தியாவும் மருத்துவ உதவிகளை வழங்கியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கன. (கி)

## இந்தியத்தூதருக்கு அகதிகள் முகாம் செல்ல அனுமதி!

### நரசிம்மராவ் அறிவிப்பு

புதுடில்லி, ஆக. 5

இலங்கையில் உள்ள இந்தியத்தூதுவர் திரு. சத்வால் அகதிகள் முகாம்களுக்குச் சென்று பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளார். என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் இந்திய லோகசபையில் நேற்றுத் தெரிவித்தார்.

அமைச்சர் நரசிம்மராவ் மேலும் தெரிவித்ததாவது; ''அகதிகள் முகாம்கள் திறக்கப்பட்டவேளையில் இந்திய தூதுவரை அவற்றுக்குச்செல்ல அனுமதிக்கவில்லை. ஏனெனில் அங்கு ஒழுங்குகள் அப்போது தெளிவாக மேற்கொள்ளப்படாததே காரணம். ஆனல் அங்கு தற்போது நிலைமைகள் சீரடைந்துள்ளதையடுத்து இந்திய தூதுவர் அவற்றுக்குச் சென்று பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளார். (கி)

## அன்ரனுவில் மின்பாய்ந்து திருத்தியவர் மரணம்!

(மாவிட்டபுரம்)

தொலைக்காட்சி அன்ரனுவைப் பழுதுபார்த்தவர் தவறுதலாக அந்த ஏரியல் மின் கம்பியில் முட்டியதால் மின்சாரம் தாக்கி பரிதாபகரமாக மரணமானுர்.

பலாலி அரசினர் மருந்தகத்துக்கு முன்பாக நடந்த இவ்விபத்து மரணத்தில் இறந்தவர் செல்லையா விஜயகுமார் என்னும் 19 வயது வாலிபராவார்.

தமது வீட்டில் இணைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சியின் ஏரியலைப் பழுதுபார்ப்பதற்காக வீட்டின் கூரை மீது ஏறிய இவ்வாலிபர் ஏரியலைக் கழற்றிய சமயம் வீதியால் செல்லும் மின்கம்பியுடன்அந்த ஏரியல் கம்பம் முட்டியதால் மின்சாரத்தால் தாக்குண்டு மரணமானதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

காலமானவரின் சகோதரி சின்னையா செல்லம்மா, தெல்லிப்பழை வைத்திய அதிகாரி திருமதி பி. யோகரட்ணம்ஆகியோர் சாட்சியமளித்தனர்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கினுர்.

அனுபவக்குறைவு, கவலையீனம் என்பன காரணமாக ஏற்பட்ட இந்த வாலிபரின் மரணம் ஏனையோருக்கு ஒரு பாடமாக அமையவேண்டுமென மரணவிசாரணை அதிகாரி தமது தீர்ப்பில் தெரிவித்தார்.

காங்கேசன்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. ரி. சிபாலசுந்தரம் விசாரணைக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## இந்தியாவிலிருந்து 150 இலங்கையர் திரும்பினர்!

(சென்னை)

இலங்கையில் இடம்பெற்ற கலவரங்களையடுத்து இந்தியாவிலிருந்து நூற்றைம்பது இலங்கையர்கள் கப்பல்மார்க்கமாக பாதுகாப்பாக இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இலங்கைப் பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் ஆவர்.

இதேவேளை இலங்கைக்கு உல்லாசப்பயணம் சென்றபோது கலவரங்களிடையே சிக்குண்ட சுமார் 200 இந்தியர்கள் அங்கிருந்தும் பாதுகாப்பாக இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இது இவ்வாறிருக்க இந்தியா இலங்கைக்கு விமான மார்க்கமாகவும், உதவிப்பண்டங்களை அனுப்பிவைக்கின்றது. சென்னையிலிருந்து ஒன்பது தொன்கள் உதவிப்பண்டங்களைக் கொண்ட விமானமொன்று இலங்கை புறப்பட்டுள்ளது. வேறு விமானங்களும் இவ்வாறு புறப்படவுள்ளன.

இந்தியா அனுப்பிவைத்துள்ள முதலாவது கப்பல் இலங்கையை அடைந்துள்ளது. ஏனைய இரு கப்பல்களும் அங்கு புறப்படவுள்ளன.

(கி)

## இன்று மாவிட்டபுரம் தேர்த்திருவிழா

[யாழ்ப்பாணம்]

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது. நாளை தீர்த்தோற்சவம் நிகழும். [அ]

''இலங்கையில்

## அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்''

### ஐ. பொ. ச. அனுதாபச் செய்தி

லண்டன் ஆக. 6

''இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும்'' என்று ஐரோப்பிய பொருளாதார சமூகம் இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

இலங்கையில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஐரோப்பிய பொருளாதார சமூகம் தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது. அவ் அனுதாபத்திலேயே அது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

''இலங்கை வளர்ந்துவரும் ஒரு வறியநாடு. இங்கு வன்முறைகள் இடம்பெறுவது பொருளாதார அபிவிருத்தி வேலைகள், மற்றும் மக்களின் வாழ்க்கை முறை என்பவற்றில் பலத்த தாக்கங்களை ஏற்படுத்தும்'' என்று அந்த அனுதாபத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுளள்னது.

எக்காரணம் கொண்டும் இலங்கையில் நடைபெறும்வன்முறைச்சம்பவங்களையிட்டு அந்நாட்டின் உள்விவகாரங்களில் ஐரோப்பிய பொருளாதார சமூகம் தலையிடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, மே. ஜெர்மனி, நெதர்லாந்து, லக்சம்பேர்க், பெல்ஜியம், டென்மார்க், கிரேக்கம் ஆகியன ஐ. பொ. சவில்இடம் பெறும் முக்கிய நாடுகளில் சிலவாகும். (கி)

## சிலாபம் திருமலையில்

(கொழும்பு)

நாட்டில் தற்போது பெருமளவு அமைதி நிலவுகிறது. ஆயினும் சிலாபம், திருகோணமலைப் பகுதிகளில் தீ வைப்புச் சம்பவங்கள் சில இடம்பெற்றன என்று தெரிவிக்கப்பட்டது.

சிலாபத்தில் நடந்த தீவைப்பில் நான்கு வீடுகள் சேதமடைந்தன. ஆயினும் உயிர்ச்சேதமெதுவுமில்லை. திருகோணமலையில் மொரவெவ என்ற இடத்திலேயே மூன்று தீவைப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன.

இங்கு நிகழ்ந்த 3 தீவைப்புகளும் மீனவர்குடிகள் மீது வைக்கப்பட்டவையாகும். உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (கி)

## அகதிகளின் சில பொருட்கள்!

(யாழ்ப்பாணம்)

வெளியூர்களிலிருந்து வந்த அகதிகளில் பஸ்ஸில் தவறவிடப்பட்ட சில பொருட்கள் கோண்டாவில் பஸ் டிப்போவில் வைக்கப்பட்டுள்ளன. சூட்கேஸ், கைபேக், மற்றும் சில பொருட்கள் இவற்றில் உள்ளனவாம்.

உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்று பஸ் டிப்போ அதிகாரி ஒருவர் கூறினுர்.

## வங்கிநேர அலுவல்கள்

(கொழும்பு)

இலங்கைவங்கி, மக்கள்வங்கி ஆகியவற்றின் கிளைகள்5ம்திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்று மணிநேரம் கொடுக்கல் வாங்கல்களுக்காகத் திறந்து வைக்க வேண்டும் என்று நிதி திட்டமிடல் அமைச்சர் அறிவித்துள்ளார்.

(மா)

## முஸ்லிம் விவாக பதிவாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டநிரந்தர முஸ்லிம் விவாகப் பதிவாளராக ஓய்வு பெற்ற அதிபர் ஜனுப் முஹம்மது ஹஸன் முஹியித்தீன் அப்துர்ரஸ்ஸாக் நியமிக்கப்பட்டுள்ளார்.

## 'மாக்ஸெஸெ' விருது

(கொழும்பு)

வணபிதா. மாஸலின்ஜெயக்கொடிக்கு இந்த ஆண்டுக்கான 'ரெமொன்ட் 'மாக்ஸெஸெ' விருது வழங்கப்படுகிறது.

இந்த விருது 'நோபல்' பரிசுக்கு சமானமாக ஆசியாவில் வழங்கப்படுகிறது. பிலிப்பைன்ஸ் நாடு இதனை வழங்குகிறது.

## கூட்டணி எம். பி. க்கள் கலந்து கொள்ளவில்லை

### சட்டமூலம் நிறைவேறியது

(கொழும்பு)

பாராளுமன்றம் வியாழக்கிழமை பிற்பகல் கூடிய பொழுது, தமிழர் விடுதலைக் கூட்டணி எம் பி. க்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

அரசாங்க எம். பி.க்கள் மந்திரிமார் உட்பட சிறிலங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த எம். பி. க்கள் கலந்துகொண்டனர்.

பிரிவினை கோரும் கட்சிகளையும் இயக்கங்களையும் தடை செய்வதற்காக அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்படவிருக்கும் ஆருவது திருத்தச்சட்டமூலம் விவாதத்துக்கெடுக்கப்பட்டது.

பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா இத்திருத்தச் சட்டமூலத்தைசபையில்சமர்ப்பித்து உரை நிகழ்த்தினுர். திருத்தச்சட்டமூலம் ஒரு மனதாக பாராளுமன்றத்தில்நிறைவேற்றப்பட்டது. வாக்களிப்பில் கலவான எம். பி. திரு. சரத்முத்தெட்டுவேகம கலந்து கொள்ளவில்லை. (மா)

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
ரஜனிகாந்த்-ஸ்ரீவித்யா
பொல்லாதவன்

ஹரன் (யாழ். நகர்)
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

ராஜா (யாழ்நகர்)
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
நடித்த
அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்

சாந்தி [யாழ் நகர்]
தினசரி காலை 10-30 காட்சி மட்டும்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
சிவாஜி லட்சுமி "தியாகம்" ஈஸ்ட்மென் கலர்

வெலிங்டன்
(யாழ். நகர்)
பிரதாப்— சோபா
மூடுபனி

லிடோ (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த
முரட்டுக் காளை

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
விஜயன் - சத்தியகலா
தனிமரம்

ராணி (யாழ். நகர்)
9-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
காலை 10-30 மணிகாட்சி மட்டும்
விஜயகுமார் - ஜெய்கணேஷ் - லதா - நாகேஷ்-சுபாஷினி
நடித்த
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(புத்தபுதிய வண்ணப் பிரதி)

REGAL ரீகல்
10-00 a. m. only. Show ends at 12-30
'GIRL FROM INDIA"
காலை 10-00 மணிக்காட்சி மட்டும்
இக்காட்சி 12-30 க்கு முடிவடையும்

## பாரததேசத்தின் தேசியக்கவி

# கவியரசர் தாகூரின்

## நினைவுதினம் இன்று

### கவியரசரின் யாழ். விஜய நினைவுகள்

கவியரசர் ரவீந்திரநாத தாகூர் 1934ம் ஆண்டு யூன் மாதம் 11ம் தேதி யாழ்ப்பாண மண்ணில் கால் மிதித்த நாள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும்.

குருதேவருக்கும் முன் மகாத்மாவும், அவருக்கு முன் சுவாமி விவேகானந்தரும் யாழ்ப்பாணத்துக்கு வந்தமை பாரத பண்பாடு யாழ்ப்பாணத்தில் நெடுங்காலமாக விருத்தியடைந்து வருகின்றமைக்குச் சான்றாகும்.

ஒரு கிழமை இங்கு தங்கியிருந்த கவியரசர், தம்முடைய சாந்தி நிகேதன் மாணவ குழு சகிதமாக யாழ்ப்பாண அரச அதிபரின் விருந்தினராக கச்சேரியில் தங்கியிருந்தார்.

அவரைக் கண்ட பாக்கியம் ஒரு இந்திய மகரிஷியைக் கண்ட அனுபவத்துக்கு நிகரானது.

இன்னிசைக் கவிகளாலும் நாடகங்கள், ஆழ்ந்த விரிவுரைகள் ஆகிய கலை வளத்தாலும் ஒரு கிழமைக்குள் யாழ்ப்பாண மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட காட்சி இன்றும் என் மனத்தில்பசுமையாயிருக்கிறது.

யாழ்ப்பாணக் கல்லூரி மாணவனாயிருந்த காரணத்தால் நான் அவரை நேரில் தரிசித்துப் பேசிய பாக்கியத்தை என் வாழ்வில் என்றும் மறவேன்.

அவரின் திவ்விய காட்சி சிவக் காட்சியாய் அடியேனுக்கிருந்தது.

கல்லூரி அதிபர் வணக்கத்துக்குரிய பிக்னெல் அவர்கள் 'தாகூர்' என்றால் ஒற்றைக் காலில் நிற்கும் விறுவிறுப்புடையவர். எங்களிற் சிலரை கச்சேரிக்கு அழைத்து கவியரசுடன் கலந்துரையாடவிட்டார்.

கலந்துரையாடலே மிகச் சிறந்ததென்று குறிப்பிட்ட கவியரசர் எங்கள் சம்பாஷணையை ஒரு வினாவுடன் தொடங்கினார். ''நான் ஒரு வங்காளி; என்னை உபசரிக்கும் இவ் அழகிய பெண் — அரச அதிபரின் மகள்—ஒரு சிங்களப் பெண்மணி. நான்வங்கமொழியில் பேச, அவர் சிங்களத்தில் கலந்துரையாடுகிறார்; இருவரும் ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொள்கின்றோம்; இந்த மொழி என்ன மொழி?

அவருடைய கம்பீரமான தோற்றம்; பொன்போன்ற மேனி வெள்ளிக்கம்பிகளால் வேயப்பட்ட நீண்டு நெளிந்த தாடி, மேல்முழுதும் மூடி இருந்த பளிங்குபோல் பளபளக்கும் கவுன், பட்டுச் செருப்புகள் இடைஇடையே கம்பளத்தில் மன்னரைப் போலநடப்பதும் இவ்வித அரச ரிஷியின் தோற்றமும் பண்பும் இக்கேள்விக்கு அச்சம் ஊட்டியது.

அதிபர் பிக்னெல்தாமும் விடைதெரியாது திகைத்தார். ''அதுதான் காதல் என்னும் கனிமொழி'' என்ற கவியரசர் அது எல்லா மொழிகளிலும் ஊடுருவிச் செல்லும் என்றார்.

''நான் ஒரு தத்துவஞானி என்ற அவப்பெயர் இங்கு எடுத்திருக்கிறேன்; அது என்னுடைய நல்லதிர்ஷ்டம். ஆனால் உண்மை வெளிக்கு முன் மரியாதையுடன் வீடு திரும்பிவிடுவேன்'' என்றார்.

உங்கள் நாடு அழகியநாடு. ஆனால் இதுவரையும் இந்த நாட்டில் ஒருமகாகவி உதிக்கவில்லையே. இலக்கிய வளம் குன்றியிருப்பதற்கென்ன காரணம் நாங்கள் மீண்டும் மௌனம். விடை சொல்லுகிறார் கவியரசர்:

உங்கள் கல்வி அந்நிய மொழியில் நடைபெறுகின்றது; அதுவே இக்குறையின் மூலகாரணம்.

ஆங்கிலத்தை கற்பிக்கும் மொழியாக கொண்டால் அதன் கரடுமுரடான இலக்கணம்; உச்சரிப்பு எழுத்துக் கூட்டல் போன்ற கஷ்டங்கள் மொழியின் உருசியைக் கெடுத்துவிடுகின்றன. தொடக்கத்தில் எலும்புகளைக்கடித்து பல்லை உடைத்துக் கொண்டால் உணவில் உருசி பின்பு ஏற்படுவதெங்ஙனம்?

பிரத்தியேகமான நேர்முகச் சம்பாஷணையை அனுபவித்த நாம் ஏனைய நிகழ்ச்சிகளிலும் அவாவுடன் பங்குபற்றினோம்.

முதலாவது யாழ்ப்பாணம் முற்றவெளியில் அவருக்களித்த பகிரங்கவரவேற்பில் அவர் ஆங்கிலத்தில் ஆற்றியபேருரை பாரத பண்பாடு மேனாட்டு அறிவியலில் செறிந்திருக்கும் காலம்வரும் வரைக்கும் உலகம் ஒரு காட்டுமிராண்டித்தனமான போர், போட்டி பொறாமை வாழ்வு - ஒரு சொல்லில் உலோகாயதம் தலைவிரித்தாடும்.

இந்தியாவின் ஆன்மீக ஒருமைப்பாடு மேற்கத்திய நாடுகளுக்கு அவசியதேவை; அது கிடைக்குமானால் இந்தியாவின் ஆத்மாவை நிலைகுலைக்கும் வறுமை, வாழ்க்கையின் மற்றும் கொடுமைகள் நீங்க வழி பிறக்கும்.

இவ்விரண்டையும் கலைமூலம் ஒருங்கிணைக்கும் முயற்சியே என்னுடைய சாந்திநிகேதன் என்ற சர்வதேச பல்கலைக்கழகம் என்றார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தமக்கு நோபல் பரிசு பெற்றுத்தந்த 'கீதாஞ்சலியை வங்காளத்திலும் ஆங்கிலத்திலும் வாசித்துக் காட்டி கேட்போரை பரவசபடுத்தினார் எல்லாவற்றிற்கும் முடிசூடியதுபோல நிகழ்ந்ததுறீகல் படமாளிகையில் அவர் நடத்திய 'சாபவிமோசனம்' என்ற நாட்டிய நாடகம்.

அதில் நடித்த ஆண்களும் பெண்களும் அவருடைய சாந்திநிகேதன மாணவ மாணவிகள் அதற்கு நட்டுவாங்கம் நடத்தியவர் கவியரசரே!

ஆங்கிலம் கலை இரண்டும் ஒரளவிற்குப் புரியக்கூடியவர்களே அங்கு குழுமியிருந்து அதனைப்பார்த்து ரசித்தனர்.

காதல் லீலை உச்சக்கட்டத்தை அடைந்தபோது, நாம் பார்த்த காட்சி கண்கொள்ளாக்காட்சி நடிகர்களின் அழகும், மயிர்சிலிர்க்கும் காதல் லீலைகளும், இதற்கு மேலாக கவியரசரின் கட்டுக்கடங்கா நட்டுவாங்கமும் சபையோரை தம்மை அறியாமலே கைகொட்ட பண்ணியதோடும் 'விசில்' அடிக்கவும் செய்தது,

'டப்பென்று அனைத்தையும் நிற்பாட்டிய கவியரசர் இவ்வித குழப்பம் இனிமேல் நடக்குமானால் உடனடியாக நிகழ்ச்சி முற்றுபெறும்! கோபாக்கினி பொறிபறக்க எச்சரித்தார்.

நிசப்தம் நிலவியது; ஒரு தெய்வீக அனுபவம் இனிதாக முடிவடைந்தது.

வரலாற்று மிக்க இந்த விஜயத்தில் எனது கருத்தைக்கவர்ந்த நிகழ்ச்சி கவியரசர் தம்முடைய கீதாஞ்சலியில் மிகச்சிறந்ததெனக் கருதப்படும் பாட்டை வாலிப தொனியில்வாசித்து இன்பமளித்ததே!

அப்பாட்டை வங்காளத்திலும் பின்பு ஆங்கிலத்திலும் வாசித்தார் கவியரசர் அதனை நாம் தமிழில் தருகிறோம்:

''எங்கே உண்மையின் ஆழியிலிருந்து பேச்சு வசனிக்கப்படுகிறதோ,

எங்கே பூரண நிலைக்காய இளையாத போராட்டத்தின் கை நீட்டப்படுகிறதோ;

எங்கே உயிரற்ற பழக்கமென்னும் பாழ் வனத்தின் அறிவென்னும் தெளிந்த ஆறுஓடிமறையவில்லையோ,

எங்கே பரந்த மனநினைவிலும் செயலிலும் உம்முடைய ஆணை செயற்படுகின்றதோ;

அங்கே அச்சுதந்திரசுவர்க்கத்துள், என் அப்பனே, என தேசம் விழிக்கச்செய்யும்''.

(ஆங்கிலச் செய்யுளின் தமிழ் உரை நடை ஆக்கம் காரைநகர் அமரர் மு. கு. சுப்பிரமணியத்தினது)

இந்தச் செய்யுளை கவியரசர் ஆங்கிலத்தில்படித்தபோது கேட்போர் நிஷ்டையில் இருந்தனர் போல தோன்றியது.

Where the world has nots been broken into fragment by narrow domestic walls: என்ற வரியைவாசிக்கும்போது சிங்கம் போல் வீறுகொண்டெழுந்தார் சபைகுதூகலித்தது.

**ந. சு. விசுவநாதன்,**

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம் 7-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telegram: 22389—24126.

## ரூ. 10 லட்சம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குளிர்சாதனப் பெட்டிகள், 'ரைஸ் குக்கர்கள்' என்பனவையாகும். இவற்றின் பெறுமதி சுமார் ஐந்து லட்சம் ரூபாய்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இவைதவிர ஏழுலட்சம் ரூபா பெறுமதியான ஆடைகள், ஆபரணங்கள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர். தெஹிவளை, வெள்ளவத்தை, கல்கிசை ஆகிய இடங்களிலேயே இதுவரை இக் கொள்ளையிடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஏனைய இடங்களிலும் இவ்வாறு கொள்ளைப் பொருட்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெறுகிறது. கொள்ளையடித்தோரும் உடனுக்குடன் கைதாகின்றனர்.

கொள்ளையிடப்பட்ட பொருட்களை மீட்கும் பொலிஸார் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளை வாங்கியதற்கான கொள்வனவுச் சீட்டு, மற்றும் அவற்றுக்கான அனுமதிப் பத்திரங்கள் என்பவற்றைச் சந்தேகத்துக் கிடமானவர்களிடம் கோரியிருக்கின்றனர். (கி)

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போதும் தலையிடாது.

இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம், புனர்வாழ்வு ஆகியனவற்றை எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக அமைத்துக்கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் அவற்றை இலங்கை அரசு செய்து கொடுக்கவேண்டும்'' என்றும் தொலைபேசி உரையாடலில் அவர் கூறினார்.

இதேவேளை இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னை குறித்து தம்முடன் உரையாட இலங்கை அதிபர் தமது தனிப்பட்ட பிரதிநிதியொருவரை இந்தியாவுக்கு அனுப்பிவைக்கிறார் என்றும் திருமதி காந்தி கூறினார். அப்பிரதிநிதியுடனான பேச்சுவார்த்தைகள் நல்லபலனை அளிக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (கி)

★ இன்று மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேர்

## தேர் இவர்ந்து வரும் தெய்வம்

மாமுகத்தான் பிணிகளைந்த மாவைநகர் தேவன்
மக்கள்பிணி களைந்திடவே மருவி இரதமேறி
மாபிணிகள் போக்கியெமை ஆண்டருள இன்று
மாவைநகர் மீதினிலே ரதபவனி வாரான்!

ஒளியிழந்த வல்லியவள் குன்மபிணி நீக்கி
ஓங்கிடவே வல்லியவள் மணிமுகமும் கொண்டு
இலங்கிடவே அருள்புரிந்த காங்கேயன் இன்று
ஈழநகர் ஒளிபெறவே இப்புவியில் வாரான்!

—சு. குகதேவன்

○

மங்காப் புகழ்வாய்ந்த மாவைநகர் தன்னில்
மாலவன் மருகன் வள்ளி மணாளன்
சிங்காரத் தேரேறி வருகின்ற தேவசேனாதிபதி
சிந்தை குளிரும் சிவனார் மகன்
ஆங்காரத்து அவுணர் குலத்தை அடக்கி
அண்டரைக் காத்த அண்டர் நாயகன்
ஓங்காரத்துள்ளே ஒளிவீசும் ஒருகைமுகன் தம்பியை
கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தி வணங்குவோமே.

— இராசையா ஶ்ரீதரன்

## மட்டக்களப்பு செல்கையில்

# 2 பொலிசும் 5மாணவிகளும் விபத்தில் காயம்

(உதயகுமார்)

யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்புக்கு பல்கலைக் கழக மாணவர்களையும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர்களையும் ஏற்றிக் கொண்டு மட்டக்களப்பு நோக்கி வந்துகொண்டிருந்த ஏழு பஸ்களில் ஒன்று விபத்துக்குள்ளானதில் பஸ் சாரதியும், 2 பொலிசாரும் 5 பல்கலைக் கழக மாணவிகளும் காயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து முருகண்டிக்கு அரைமைல் தூரத்தில் இந்த விபத்து ஏற்பட்டது.

பஸ்ஸின் 'பிரேக்' உடைந்ததால் சாரதியினால் கட்டுப்படுத்தமுடியாதநிலையில் பஸ் மரம் ஒன்றின் மீது மோதி நின்றதாம். சாரதி நடராஜமூர்த்தி என்பவர் பலத்தகாயத்துடன் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காயமடைந்த ஏனையவர்கள் பிரத்தியேக வாகனமொன்றின் மூலம் மட்டக்களப்புக்குக் கொண்டுவரப்பட்டனர்.

## மரண அறிவித்தல்

### திரு. ஆ. தேவராஜா

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் இரசாயனியாகக் கடமையாற்றிய திரு. ஆ. தேவராஜா 24-7-83-ல் காலமானார். இவர் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை ஆசிரியை குயினியின் அன்புக் கணவரும், தேவதர்ஷினி, தேவசோபினி, தேவதயாளினி, தேவதயாளன், தேவசுதர் ஆகியோரின் அருமைத் தந்தையும் காலஞ்சென்ற இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. ஆறுமுகம், திருமதி சரஸ்வதி ஆறுமுகத்தின் அன்புப் புதல்வனுமாவார். அன்னாரின் அடக்க ஆராதனை கடந்த 27-ந் திகதி புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் பருத்தித்துறை கிறிஸ்தவ மயானத்தில் அடக்கம்பண்ணப்பட்டது. 8132

## மரண அறிவித்தல்

### திருமதி சவுந்தரநாயகி சிவகடாட்சம்

கந்தர்மடம், 112, அரசடி ரோட், திருமதி சவுந்தரநாயகி சிவகடாட்சம் அவர்கள் 27-7-83 இரவு சிவபதமடைந்தார். ஈமக்கிரியைகள் 28-7-83 நடைபெற்றது. இவர் காலஞ்சென்ற கைலாசம் சிவகடாட்சம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற முதலியார் ஆறுமுகம் கனகசபையின் மகளும், பெரியதம்பிநாதன் சத்திவேல் அவர்களின் மைத்துனியும், திருமதி தங்கம்மா செல்வரெத்தினம் அவர்களின் பெரிய தாயுமாவார். இம்மரணச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தவிர்க்க முடியாத காரணத்தினால் இவ் அறிவித்தலை எமது அனேக உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

பெ. சத்திவேல்,
83, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி செ. தங்கம்மா,
40/3, புகையிரதக்
கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

8129